பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 கார்த்திகை 5 முஹர்றம் 11 இதழ் 281
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20 - 11 - 80

RECEIVED 13-11-[illegible] PERIODICALS DIVISION

## மேயர், மெம்பர்களுக்கு இனி விசேடபடி இல்லை!

(கொழும்பு)

உள்ளுராட்சி மன்றத் தலைவர்கள், பிரதித் தலைவர்கள் ஆகியோருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவந்த விசேடபடி அடுத்தவருடத்திலிருந்து வழங்கப்படமாட்டாதென்றும் இந்தப்படியை அடுத்தவருடத்திலிருந்து அந்தந்த உள்ளுராட்சி மன்றங்களே தங்கள் வருமானத்திலிருந்து வழங்கவேண்டுமென்றும் மாநகரசபைகள், நகரசபைகள் ஆகிய உள்ளுராட்சி மன்றங்களுக்கு உள்ளுராட்சி அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

மாநகர மேயர்கள், உதவி மேயர்கள், உறுப்பினர்கள், நகரசபைத்தலைவர்கள், உதவித் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் இந்த அரசு பதவிக்கு வந்தபின்னர் விசேஷ படிகளும் சலுகைகளும் அனுபவித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "தனிநாடு தவிர்ந்த எதையும் தருவதற்கு நாம் தயார்"

## கூட்டணியின்கோரிக்கைக்கு பிரதமர் பிரேமா பதில்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கொள்கைகளை நூற்றுக்கு நூறு எம்மால் நிவர்த்திசெய்யமுடியாது. நீங்கள் கேட்கும் தனி நாட்டை எம்மால் தரமுடியாது என்பதை மிகவும் கவலையுடன் கூறிக்கொள்கிறேன் 'தனிநாடு' தவிர்ந்த வேறு எதைவேண்டுமானலும்-எமது தலை வேண்டுமானலும் எமது உள்ளம் வேண்டுமானலும் கேளுங்கள் தருகிறோம்.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் கூறினர்.

## பிரதமர் கேட்பது ஒற்றுமை; மத்யூ பேசுவது எதிர்மாறு

### தமிழ்மக்கள், சொந்த வழியை நாடுவதற்கு இதுவே காரணம் என்கிறார் கூட்டணி சிவா

(கொழும்பு

ஒற்றுமை - ஒத்துழைப்புப் பற்றியெல்லாம் பிரதமர் இன்று பேசுகிறார் நேற்று இங்கு பேசிய கைத்தொழில் அமைச்சர் திரு சிறில் மத்யூ வேறு விதமாகப் பேசினர். இவற்றில் எது அரசின் கொள்கை என்று தெரியவில்லை. இதனலேயே நாம் எமது சொந்த வழியில் செல்ல விரும்புகிறோம்.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு.எம். சிவசிதம்பரம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாட்டின் அபிவிருத்திக்காக மக்கள் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்று கூறும் அரசு வெங்காய உற்பத்தியாளர் மட்டும் பாவனையாளர் கஷ்டப்படக்கூடாது என்று கூறுகிறது.

வேலை நிறுத்தத்தினுல் வேலை இழந்த 40 ஆயிரம் ஊழியர்களினதும் அவர்களின் குடும்பத்தினதும் கஷ்ட நிலையை உணர்ந்து இப்பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வர அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும், (ம-இ)

வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது பேசிய பிரதமர் மேலும் கூறியதாவது:

தமது நியாயமான கோரிக்கைகளை இன்றைய அரசு ஏற்கவில்லை என்று கூட்டணியினர் இங்கே கூறுகிறார்கள். ஏன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மட்டும் அவர்களின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதா?

திருமதி பண்டாரநாயக்காவின் குடியுரிமை ரத்துச் செய்யப்பட்டது குறித்தும் கூட்டணியினர் கவலைப்படுகின்றனர். அவரது ஆட்சிக் காலத்தில் நடந்தவற்றை ஒரு கணத்திலேயே மறந்துவிட்டீர்களா?

### பிரச்னைகள் இல்லாமல் இல்லை

இந்த நாட்டில் பிரச்னைகள் இல்லாமல் இல்லை. வேற்றுமைகளைமறந்து நாம் கைகோர்த்து ஒற்றுமையாக செயலாற்றுவ

(8-ம் பக்கம் பார்க்க)

## பட்ஜட் 104 வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நேற்று 104 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது.

வரவு செலவுத் திட்டத்தின் 2வது வாசிப்பு மீதான விவாதம் நேற்று இரவு நடைபெற்றபோது 122 பேர் அதனை ஆதரித்தும் 18பேர் அதனை எதிர்த்தும் வாக்களித்தனர். (ம-இ)

## கூட்டணிக்கு பிரதமர் பாராட்டு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணி சிறந்ததொரு ஜனநாயக அமைப்பு. அதனை நான் நன்கு அறிவேன். அதனலேயே நான் அக்கட்சியில் நல்ல மதிப்பு வைத்திருக்கிறேன். அக்கட்சியில் எவரும் எப்பதவிக்கும்வரலாம், எமது கட்சியிலும் இப்போது இதேநிலைதான். அன்றைய நிலை அப்படி அல்ல,

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் கூறினர். (ம-இ)

## நத்தார் புத்தாண்டு சித்திரப் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகமும், லியோ கழகமும் இணைந்து, யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தும் நத்தார்-புத்தாண்டு சித்திரப் போட்டி, நாளைக்காலை, யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, மூன்று பிரிவுகளாக நடைபெறும். சித்திரம் வரைவதற்கான அட்டையை லயன்ஸ் கழகத்தினர் பரீட்சை மண்டபத்தில் வைத்து, மாணவர்களுக்கு வழங்குவர். மற்றைய உபகரணங்களை மாணவர்கள் தம்முடன் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவருதல்வேண்டும்.

கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை அதிக மாணவ, மாணவிகள் இப்போட்டியில் பங்கு கொள்வதற்கு முன்வந்துள்ளனர்

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு, விலையுயர்ந்த பரிசில்களை, இலங்கையிலுள்ள தூதரகங்கள் வழங்கவுள்ளன.

போட்டிகளில் பங்குகொள்வோர் காலை 8-30 மணிக்கு முன்னர் பரீட்சை மண்டபத்தில் பிரசன்னமாய் இருக்க வேண்டுமென்று சகல பாடசாலைகளுக்கும் லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது

சுன்னகத்தில்

## சிறிமாவுக்கு நாளை விசாயிகள் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வரும் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு சுன்னகத்தில் விசாயிகள் பொது

(8-ம் பக்கம் பார்க்க)


## கையிருப்பில் உண்டு

350FG வான்கள் குண்டசாலை புத்தம்புதிய தேக்கு பொடியுடன், 830, WF ரிப்பர்கள், LD வான் தபால் கந்தோர் பொடியுடன், சிவிலியன் பஸ் (26 ஆசனங்கள்)



துரை

ஆர். ஜி. பில்டிங், 66, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7750 – 7786.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஜப்பானில் முற்றாக மறுசீரமைக்கப்பட்டு உன்னதநிலையில் இறக்குமதிசெய்யப்பட்ட 'இசூசு' டீசல் ட்றக் (Isuzu. Elf-TLD 64/1976/77-Model 250 Double Rear Wheel Diesel Truck ,மிற்சுபிசி Mitsubishi 4 DR 50 A Diesel Engine 4 Cylinder),டொயோட்ட (Toyota 2 J 4 Cylinder Diesel Engine) - டொயோட்டா (Hiace) வானை டீசல் வாகனமாக மாற்றுவதற்கு ஏற்றது-ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சாந்தி ரயர் வேக்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8015. (7392)

## தேவை

அனுபவமுள்ள பைண்டர் தேவை. ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஸ்ரீ ஆத்ம ஜோதி அச்சகம், நாவலப்பிட்டி. 7395

## அறிவித்தல்

கேரதீவு ஆயத்திலுள்ள தேநீர்ச்சாலை பூநகரி ப. நோ. கூ. சங்கத்தினால் குத்தகைக்கு விடப்படும். நிபந்தனைகளும், விண்ணப்பப்பத்திரமும் சங்க அலுவலகத்தில் ரூபா 2/- (மீளளிக்கப்படமாட்டாது) செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தவேண்டும் விண்ணப்ப முடிவு திகதி 3-12-1980.

**பொதுமுகாமையாளர்**
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.
7396

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் வசித்த காலஞ்சென்ற நாகமுத்து தம்பையா தம்பியப்பாவின் மரணசாதன சொத்துக்கள் சம்பந்தமாக,
மரணமெய்தியவர்

மரணசாதன தத்துவ வழக்கு இல. த/3561

சின்னத்தம்பி அம்பிகாபதி, கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
7388 பதிவாளர்.

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 5-ந் திகதி
வியாழக்கிழமை
(20-11-80)

மேடம்: அவசரமுடிவின் மூலம் ஆபத்தைவிலைகொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அயலவர்களின் குறுக்கு வழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும்.

இடபம்: இல்லம் இன்று கட்டி வெல்லம் போல் இனிக்கும். இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்து கொள்வீர்கள். வரவில் திருப்தி காணப்படும்.

மிதுனம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் உருவாகும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். குடும்பத்தில் பூசல் தோன்றும். பொறுமை நன்று

கடகம்: வாகனச் சாரதிகளுக்குச் சிறப்பான தினம். வரவிலும் திருப்தி காணப்படும். தாய்வழி மூலம் சிலருக்குத் தனலாபமும் கிடைக்கும்.

சிங்கம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணிநிவர்த்தியாகும், பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சிதரும்

கன்னி; கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும், முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை முறியடிப்பதற்கு சிலர் முனைவர்.

துலாம்: காதலர்களுக்கு கற்கண்டான தினம், குடும்பஸ்தர்களின் வாழ்வில் குதூகலம் தென்படும், உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

விருச்சிகம்; வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும், கடன்தொல்லை அதிகரிக்கும், சிந்தனையைத் ஒரு வழிப்படுத்தி செயலாற்றவும், சுமாரானதினம்.

தனுசு: கனிவான நினைவின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், பிதாவழிச் சுகமும் உண்டு.

மகரம்; தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கும், பொதுஜனத் தலைமையும் கிடைக்கும்.

கும்பம்: முயற்சியால் உயர்ச்சியுண்டு. பணவிவகாரங்களில் திருப்தியான நிலைகாணப்படும், வெளியிடத்தில் இருந்து நற்செய்தியும் கிடைக்கும்,

மீனம்: பணம்பறிபோவதற்கு இடமுண்டு, முகமன் பேசுவோர்விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சபைகள் என மாற்றுக'

(பண்டத்தரிப்பு)

பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சங்கங்களை இனிமேல் 'பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சபைகள்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படவேண்டுமென்று வடபிராந்திய பொலிஸ் மா அதிபர் திரு. மகேந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கிணங்க சங்கானை பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சங்கத்தை இனிமேல் 'சங்கானை பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சபை' என்று பெயர் மாற்றம் செய்வதென்று சங்கானை கலாச்சார மண்டபத்தில் சங்கத்தலைவரும் சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுமான திரு. டி. எச். பிரேமதாசா தலைமையில் நடைபெற்ற சபையின் விசேட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

## கரோல் ஆராதனை

(அரியாலை)

யாழ்ப்பாணத்திலுள்ள பதினாறு கலூரிகளில் கல்வி கற்கும் கிறீஸ்தவ மாணவ, மாணவிகள் இணைந்து நடாத்தும் வருடாந்த கிறீஸ்மஸ் கரோல் ஆராதனை இன்று மாலை யாழ். பரியோவான் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வாராதனையில் பலவேறு மதப்பிரிவுகளைச் சேர்ந்த குருமாரும், பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள். (அ)

0 0 0

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் யாழ். பரியோவான் கல்லூரியும் இணைந்து நடாத்தும் கிறிஸ்மஸ் கரோல் ஆராதனை ஞாயிற்றுக்கிழமை மாலை சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த ஆராதனையை 'யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம், டி, ஹோர்சிங்டன் அடிகளாரும். அருட்திரு யே. சாவானந்தம் அடிகளாரும் ஒப்புக்கொடுப்பார்கள். (அ)

## மானிப்பாயில் கலைவிழா

பண்டத்தரிப்பு

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர்கள் சங்கமும் ஒன்றிணைந்து நடாத்தும் கலைவிழா நாளை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது (க)

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/14568 இலக்க வழக்கில் வாதி யாழ்ப்பாணம் நல்லூர் 13, செட்டித்தெரு சதாசிவம் கந்தையாவுக்குப் போகவேண்டிய தீர்வைத் தொகை 31650/- ரூபாவும், இதில் 30,000/- ரூபாவுக்கு 7-10-74 தொடக்கம் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 18% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 775-94 சதமும், விற்பனவுச் சலார்களும். இதில் கொடுக்கப்பட்ட ரூபா 3,000/- கழித்து மீதித் தொகையை பிரதிவாதிகளாகிய யாழ்ப்பாணம் 49 ஆஸ்பத்திரி வீதி முத்துக்குமாரு இராமலிங்கத்திடமும் அவரின் மகள் தேவகனியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்விபரிக்கப்படுமாதனம் 1980-ம் வருடம் டிசம்பர் மாதம் 12-ந் திகதி (12-12-80) வெள்ளிக்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பள்ளிப் பகுதி முகமாலை இக்காவிற் கோவிற்பற்று கிளாலி இறை 'காரைக்காடு தோட்டம்' ஏக்கர் நாற்பதும், தென்னைகளும், எல்லை கிழக்கும் தெற்கும் இராமலிங்கம் பெண் இராசம் மாவிஞதனம் வடக்கு ரேமன் கதலிக் சேச்சுக்குரிய 'அலரிக்காடு' தென்னந்தோட்டம். மேற்கு கிராமச்சபை றோட். பதிவு B 61/132 இவ்வாதனம் 3-2-71-ல் அளவையாளர் T. கந்தையாவால் 4946 இலக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

**வி. செ. குட்டிப்பிள்ளை**
விற்பனை ஆணையாளர்
643, கே. கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
7397

## மரம்நாட்டு விழா

(பண்டத்தரிப்பு

சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் மரம் நாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் கலந்துகொண்டு மரநடுகையை ஆரம்பித்து வைத்தார். (க)

## வாடகைக்கு / குத்தகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 2 படுக்கை அறைகளுடன் கூடிய நவீன வீடு, மின்சாரம், தண்ணீர், வசதிகளுடன் தனி வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

**விளம்பர இல. 7380,**
C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.
7380

## பிராமண பூசகர் தேவை

எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலுக்கு ஓர் பிராமண பூசகர் தேவை. எல்லா வசதிகளும் உண்டு. விபரங்களுக்கு:

**ரஞ்சனுஸ், 17, 18, 18A, நவீனசந்தை,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி: 8015 (7391)

## ¿ந்தை செல்வா ஞாபகார்த்த நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மு. சிவசிதம்பரம் ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48-ம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ்

"தந்தை செல்வா ஞாபகார்த்த நம்பிக்கைப்பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்"

எனப்படும் ஒரு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

1. (அ) நாட்டு மக்களும் வெளிநாட்டிலிருந்து வரும் பார்வையாளர்களும் மறைந்த தலைவர் தந்தைசெல்வாவுக்குஅஞ்சலி செலுத்துவதை இயலச்செய்யும் வண்ணம் அமைக்கப்பட்ட நினைவுத்தூணுடன் கூடிய சமாதியைப் பேணிவருதலும் பேணிக்காத்தலும் அத்துடன்

(ஆ) அவசியமாகும்போதிலெல்லாம் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் பொருத்தமானதென கருதப்படும்போதிலெல்லாம் எவையேனும் நீடிப்புக்களையும் சேர்ப்புக்களையும், மாற்றங்களையும் நிர்மாணித்தல் உள்ளிட்ட நல்ல பழுதுபார்த்த நிலையில் சொல்லப்பட்ட சமாதியை வைத்திருத்தல்.

ஆகியநோக்கங்களுக்காகப்பயன்படுத்த வேண்டிய (இதனகத்துப் பின்னர் "சமாதி நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தந்தை செல்வா ஞாபகார்த்த சமாதி நிதியத்தை, தனியொரு நிதியமாகவும், வேறுபட்ட நிதியமாகவும் நிருவகித்தலும், முகமை செய்தலும், கட்டுப்படுத்தலும் அத்துடன்

2. பொதுவில் கல்வியை முன்னேற்றுவதற்கும் முக்கியமாகப் பின்வரும் வேறு நோக்கங்களுக்கும் அதாவது

(அ) தமிழ்பேசும் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் இலங்கையிலும், வெளிநாட்டிலும் ஆராய்ச்சி செய்தல் உள்ளிட்ட தமது கல்வியைத் தொடருவதற்கென புலமைப்பரிசில்கள், கடன்கள், முற்பணங்கள், வேறு மானியங்கள் என்ற வகையாக நிதியுதவி ஏற்பாடு செய்தல்.

(ஆ) ஆண்டு தோறும் அல்லது ஆண்டுக்கு இருமுறை சிறப்புப் பெற்ற ஆட்கள் பொதுமக்களுக்கு நலன்பயக்கும் தலைப்புக்களின் கீழ் ஞாபகார்த்த விரிவுரைகள் ஆற்றுவதை ஒழுங்குபடுத்தல்.

(இ) தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகிய துறைகளிலும், தமிழ்பேசும் மக்களின் சமூக அரசியல், சரித்திர, பொருளாதார அபிவிருத்தியின் மீதும் மேற்சொல்லப்பட்ட ஞாபகார்த்த விரிவுரைகள் பற்றிய புத்தகங்களையும் பத்திரங்களையும் வெளியிடுதலும், தந்தை செல்வாவினதும் வேறு தமிழ்க் கல்விமான்களினதும் தலைவர்களினதும் சுயசரிதையையும், பேச்சுக்களையும், எழுத்துக்களையும் வெளியிடுதல் ஆகிய பலவும்.

ஒப்பம்
**மு. சிவசிதம்பரம்,**
பாராளுமன்ற உறுப்பினர்,
நல்லூர்.
7394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரான் — ஈராக் யுத்தம்:

# ஈரானின் சூதென் நகரில் கடும் யுத்தம்!

## ஐ. நா. விசேட தூதுவர் தெஹ்ரான் விஜயம்

லண்டன், நவ. 19

ஈரானின் சூதென் நகரைச் சுற்றி ஈரான்—ஈராக் துருப்புக்களு கிடையில் கடும் யுத்தம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகரம் தொடர்ந்தும் தனது கட்டுப்பாட்டிலிருந்து வருவதாக ஈரான் கூறுகின்றது. ஈராக் இந்நகரில் இருந்து மேலும் பல கிலோமீட்டர்கள் முன்னேறிச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஈரான்—ஈராக் யுத்தம்குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஐ.நாவின் விசேட தூதுவராக சுவீடனின் முன்னாள் பிரதம மந்திரி தெஹ்ரானிற்கு விஜயம்செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக அவர்ஈரானிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனக் கூறப்படுகிறது. ஈராக்கிய ஜனாதிபதி பாணிசத்தரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தக்கூடுமெனக் கூறப்படுகிறது. அதன்பின்னர் அவர் பாக்தாத்திற்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

# விமானவிபத்து

## 100 பேர் மாண்டனர்!

சியோல், நவ. 19

கொரியா ஏயர்லைன்ஸ்சின் போயிங் விமானமொன்று 'சியோல் கிம்போ' விமான நிலையத்தில் தரையில் இறங்கும்போது தீ பற்றிக்கொண்டதால் சுமார் 100 பேர்வரை மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இவ் விமானத்தில் சுமார் 200 பேர்வரை பயணம்செய்த தாக ஏயர்லைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். ஒரு மணி நேரத்துக்குப்பின்னர் தீயணைக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்கள்.

விமானத்தின் என்ஜினில் தீ பிடித்துக்கொண்டதினாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. இவ் விமானவிபத்து பற்றி விசாரணைகள் மேற்காள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. மீட்புப்பணிகளும் நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது. (வெ)

## இந்திராவுக்கு ஹாஷா ஷரீப் வாழ்த்து

சென்னை, நவ. 19

இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியின் 63வது பிறந்ததினம் இன்று நடைபெறுவதையொட்டி அவருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை தமிழ்நாடு சட்டசபை இந்திரா காங்கிரஸ் தலைவர் ஜனப்ஹாஷா ஷரீப் அனுப்பிவைத்துள்ளார்.

## இந்திராவின் 63 வது பிறந்ததினம்

புதுடில்லி, நவ. 19

இந்தியபிரதமமந்திரிதிருமதி இந்திராகாந்தியின் 63வது பிறந்ததினத்தையொட்டி அவருக்கு இந்திய முப்படைகளின் தலைவர்களும் இன்று வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்

இவரின் பிறந்ததினம் தமிழ்நாடு, மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் இன்று கொண்டாடப்படுகிறது. (வெ)

## 15,000 மக்கள் வீடிழப்பு!

சென்னை, நவ. 19

சென்னையில் பெய்த பெருமழையினால் சுமார் 15,000 சேரி வாழ் மக்கள் வீடுகளை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## “சுயதொழில் மூலம் உயர்வடையலாம்”

(உடுப்பிட்டி - புலோலி)

“வேலையற்றிருக்கும் இளைஞர்களும், யுவதிகளும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதனால் வருவாயைப் பெற்றுக்கொள்வதுடன் கிராமிய பொருளாதாரத்தையும் உயர்வடையச் செய்யலாம்”

இவ்வாறு உடுப்பிட்டி கரணவாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்ஆதரவில் நடைபெற்ற பொருட் காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட நிர்வாக உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் குறிப்பிட்டார். கரணவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப் பொருட்காட்சிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து தலைமை வகித்தார். திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில் “இளைஞர்களையும் யுவதிகளையும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட வைப்பதற்கான நடவடிக்கைகள் கிராம அபிவிருத்திச் சங்கங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் கிராம இளைஞர்களும் யுவதிகளும் வீட்டிலிருந்தபடியே வருவாயைப்பெற்றுக் கொள்ள வழி வகுக்கப்படும்.

அரசாங்கம் கிராமிய அபிவிருத்தி[illegible]த்துறை அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக கிராம- அபிவிருத்திச்சங்கங்களுக்கு வழங்கிவரும் உதவிகளை நாம் சிறந்த முறைகளில் பயன்படுத்தி எமது பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும்” என்றார். (ஈ)

## சிகரட் வான் கொள்ளை: நால்வர் கைது

(வவுனியா)

சில வாரங்களின் முன் பட்டப்பகலில் விற்பனையை முடித்துக்கொண்டு திரும்பி வந்த சிகரட் வானை வழிமறித்து ரூபா 15 ஆயிரம் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக நால்வரை வவுனியா பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

தலைமை அலுவலகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கே. ஆரியதிலகவின் தலைமையில் விசாரணைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் எக்கநாயக்க, சமரக்கோன் ஆகிய இருவருமே இச் சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணேசலிங்கம் சேகரலிங்கம் அல்லது சங்கர் அல்லது ரஹீம்; மானிப்பாயைச்சேர்ந்த கந்தையா நகுலேந்திரன் அல்லது கிளி, மூதாரைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிறிசங்கர் அல்லது ராசசிங்கம் அல்லது மாடசங்கர் மாங்குளத்தைச்சேர்ந்த கனகசபை குகநாததாசன் அல்லது குகன் ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டோராவார்கள்.

கொள்ளையின் பொழுது இவர்களால் பாவிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு பிஸ்டல், இரண்டு கிறிஸ் கத்திகள் அவர்கள் அப்போது அணிந்திருந்ததாகச் சொல்லப்படும் ஆடைகள் முதலானவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதியும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் நால்வரையும் வவுனியா மாவட்ட நீதவான் திரு. கே. பி. பெர்னாண்டோ முன்னிலையில் பொலிசார் ஆஜர்செய்தனர்.

அவர்கள் நால்வரையும் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிபதி அடையாள அணிவகுப்பு நடாத்தும் உத்தரவிட்டார். (அ)

## பளைப்பகுதி மாணவரிடையே சேமிப்புப் பழக்கம்

(பச்சிலைப்பள்ளி)

பளைப்பகுதியிலுள்ள மகா வித்தியாலயங்களில் கல்விகற்கும் மாணவர்கள் பளை மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து சேமிப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றார்கள்.

பளை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. சு. லோகநாதன் மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்பது தொடர்பாக வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயம் பளை மகா வித்தியாலயம் உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடத்திய கலந்துரையாடலின் பயனாகவே இப் பாடசாலைகளின் மாணவர்களில் ஏராளமானோர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிப்பதில் அக்கறை காட்டி வருகிறார்கள். (அ)

## நூல்நிலையம் பூர்த்தி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராமசபை கட்டிடத்தின் பின்புறமாக 85 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் புதிய நூல் நிலையத்திற்கான கட்டிட வேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன.

நவீன வசதிகள் அடங்கிய [illegible] அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## அவுஸ்திரேலியாவின் இந்தியத் தூதுவர் செய்திகுறித்து கவலை

கன்பெரா, நவ. 19

இந்தியாவிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவரின் செய்தியில் அடங்கியிருந்த இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டதின் விளைவாக இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்திக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலைமைகுறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்தியப் பிரதமருக்கு தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இவ் இரகசியத் தகவல்கள் வெளியானது நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு செயல்தான் என்ற கூற்றை கன்பெராவில் அவுஸ்திரேலிய வெளியுறவுத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை மறுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய நிலைமைகள் காணப்படுவதாகஇந்தியாவிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவர் முன்பு அறிக்கைவெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

## “ஏழைமக்களுக்கு உதவ கூட்டுறவு நிறுவனங்கள் முன்வரவேண்டும்”

### தமிழ்நாடு முதலமைச்சர் வேண்டுகோள்

சென்னை, நவ 19

“விவசாயமில்லாததொழிற்பிரிவினரும் நன்மையடையும் விதத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் பணியாற்றவேண்டும்”

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளின் இரண்டாவது தேசிய மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: ஏழைகளை எட்டுமளவிற்கு உதவிகளை கூட்டுறவு நிறுவனங்கள் செய்யவேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் பரவலாக அமைந்திருப்பதினால் அவற்றின்மூலம் ஏழைமக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியும். கூட்டுறவு நிறுவனங்கள் மேலும் பல வங்கிக் கிளைகளைத் திறக்க முன்வரவேண்டும், சிறு விவசாயிகள் கடனுக்கு வழங்கப்படும் வட்டிவீதத்தை கூட்டுறவு நிறுவனங்கள் குறைக்க வேண்டுமென்றார். (வெ)

## ‘எமதுபிரதேசங்களை அபிவிருத்தி செய்வது மிக அவசியமாகும்”

(மாவிட்டபுரம்)

கீரிமலை கமசேவை நிலையம், தேசியசேவை இளைஞர் மன்ற வலி-வடக்குக் கிளை ஆகியவற்றின் ஆதரவில் காங்கேசன் துறைத் தொகுதியில் மரம் நாட்டும் இயக்கம் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீரிமலை கமநலசேவை நிலையத்தில் எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் இம்மரம்நாட்டும் இயக்கத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

எமது இலட்சியப் பயணத்தில் எமது பிரதேசங்களை விருத்திசெய்வதும் மிக அவசியமானதொன்றாக இருப்பதால் இம்மரம்நாட்டும் இயக்கத்தில் நாம் தீவிரமாக இயங்கவேண்டும் என திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

கீரிமலை கமநலசேவை நிலைய விவசாயசேவை உத்தியோகத்தர்கள் மூலமாக இம்மரம் நாட்டும் இயக்கம் கிராமரீதியாக மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதனையடுத்து கீரிமலை கமநலசேவை நிலையத்தினர் இம் மரம்நாட்டும் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தேசியசேவை இளைஞர்மன்ற வலி-வடக்குக்கிளை காங்கேசன் துறைத் தொகுதியில் மரம் நாட்டுவதற்காக 79 ஆயிரம் ரூபாவை ஒதுக்கி அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமையில் நடந்த இதுபற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், மற்றும் பொது நலசேவா மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொண்டர்கள் மூலமாக இம் மரம்நாட்டும் இயக்கத்தைத் தீவிரமாக மேற்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது. (க)



(வலி வடக்கு பளை)

பாவனையாளர் பாதுகாப்புச்சங்கத்தின் தலைவராக திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் யாழ் விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவு அதிகாரி திரு. நவரத்தினம் தலைமையில் நடந்த சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றது.

வலிகாமம் வடக்கு பாவனையாளர் சங்கத் தனாதிகாரியாகவும் இவர் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

## யாழ். நகரில் ஐ. நா. தினவிழா

(நெல்லியடி)

யாழ். கல்வித் திணைக்களம் ஐக்கிய நாடுகள் தினவிழாவை சிறப்பான முறையில் கொண்டாடவுள்ளது. இம்மாதம்22ம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் ஐ. நா. தினவிழா நடைபெறவுள்ளது.

ஐ. நா. தின விழாவினைமுன்னிட்டு மாணவர்களிடையே வட்டாரரீதியாகவும். மாவட்ட ரீதியாகவும் பல போட்டிகள் நடைபெறும்.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் இவ்விழாவில் பல கலைநிகழ்ச்சிகளும், படக்காட்சிகளும் இடம்பெறும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் பேச்சுக்களும் இடம்பெறும். (அ)

## திருமலையில் லக்சல கிளை

(திருமலை)

திருகோணமலை நகரில் லக்சல கிளைத்திறப்பு விழா இவ் வருட இறுதியில் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானால் திறந்து வைக்கப்படவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உனது நெஞ்சிற்குத் துரோகம் செய்யாதே. மனச்சாட்சியின் படி நட. நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

# நமது நோக்கு

## இலட்சிய வாழ்வு

இலங்கையின் பூரண சுதந்திரத்திற்காக உழைக்க உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிப மாநாடு பற்றிச் சென்ற வாரம் காலமான முன்னாள் செனட்டர் நாகலிங்கத்தின் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த இயக்கத்தின் முழு விபரமும் அண்மையில் வெளியிடப்பட்ட ஹண்டி பேரின்பநாயகம் நினைவு நூலில் வர்ணிக்கப்பட்டுள்ளது. காரணம் அறிஞர் பேரின்பநாயகம் அவர்களே இதன் மூலகர்த்தா.

மகாத்மாகாந்தியின் இந்திய சுதந்திர இயக்கம் அருகேயுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டை வலுவாகக் குலுக்கிவிட்டதன் விளைவே இவ்வாலிப மாநாடு. இதை உருவாக்க அரும்பாடுபட்ட இலட்சியவாதி பேரின்பநாயகம், தமக்கிசைந்தசுதந்திரதாகங்கொண்ட வாலிப திறமைசாலிகளைத் திரட்ட முடிந்ததன் பயனாக இந்த ஸ்தாபனம் உயிர்த்துடிப்புடன் பணிபுரிந்தது.

அந்தத் தியாக உணர்வுடைய கூட்டத்தினரில் முக்கிய இடம் வகித்தவர் காலஞ்சென்ற சமசமாஜ பிரமுகர் நாகலிங்கம். பேரின்பநாயகத்தின் தலைமையைப் பின்பற்றிய நாகலிங்கம், ஆற்றிய அரிய சாதனைகள் பல. அவற்றை இன்று அறியாதவர் பலர். காரணம் சந்தர்ப்பவாதம் அரசியலில் மட்டுமல்லாமல், தினசரி வாழ்விலேயே மக்களை இழுத்தச் செல்கின்றது. தனிப்பட்ட நன்மையை எவ்விதத்திலும்தேடிவாழும் மனிதர்கள் நாகலிங்கம் போன்ற தன்னலமற்றதலைவர்களை நாடுவது அரிதினும் அரிது.

'சாதி, சமய, இன வேறுபாடற்ற சுதந்திரஇலங்கை' என்ற குறிக்கோளில் அசையாத நம்பிக்கை கொண்டு உழைத்த வாலிய பாநாடு 1930ம் ஆண்டுவரை தென்னிலங்கையின் சிங்களத்தலைவர்கள் பலரின் ஆதரவு பெற்று வளர்ச்சிபெற்றது.

டொனமூர்த் திட்டம் நாட்டின் ஆட்சியில் சீர்திருத்தம் கொண்டு வருவதாக அமுலுக்குவர மாநாட்டின் வரலாறும் பலவீனப்பட்டது. இலங்கை அரசாங்க சபையின் பொதுத்தேர்தலை வாலிப மாநாடு மிகட்பிற்போக்கான ஆட்சிமுறையின் சின்னமெனக் கருதியதால் மன்னாரைத் தவிர ஏனைய வடபகுதி அபேட்சகர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தனர்.

அன்று தொட்டு இன்று வரைக்கும் இந்நாட்டைப் பிடித்த அரசியல் வருத்தம், இன்று நாட்டைப்பொதுவாகவும் தமிழ்மக்களைச் சிறப்பாகவும் இந்நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது இந்த நீண்ட வரலாற்றை எவ்விதத்தில் விளக்க முடிந்தாலும், நாட்டைபிளவுபடுத்தி வகுப்புவாதத்தை வளர்த்தது, சுதந்திர இலங்கையின் அளப்பரிய சாதனையாகும்.

தெற்கிலும் வடக்கிலும் அரசாங்கசபை, பாராளுமன்றம் இவற்றில் இடம் பிடிக்கும் முயற்சிகளே முதன்மை பெற்றன.

ஒற்றுமைப்பட்ட சுதந்திர இலங்கை என்ற ஒரு அசையாத நம்பிக்கை கொண்டு உழைத்த வாலிப மாநாடு தென்இலங்கையில் பல பெரியோரின் ஆதரவு பெற்றுச் சிலகாலம் வளர்ச்சியடைந்தது.

டொனமூர்த் திட்டம் ஒன்றை ஆங்கில ஆட்சியாளர் இலங்கையின் ஆட்சிமுறைக்கு ஒரு சீர்திருத்தத் திட்டமாக அளித்தனர். அதன் விளைவாக உருவெடுத்த இலங்கை அரசாங்க சபையின் பொதுத்தேர்தலை வாலிப மாநாடு பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீவிரப்படுத்தியது. காரணம், இலங்கையின் சுதந்திரத்திற்கு இது ஒரு முன்னேடியல்ல, முட்டுக்கட்டையே என்ற கருத்து. இதனை ஏற்றுக்கொண்ட மன்னாரைத் தவிர்ந்த வடபகுதி அபேட்சகர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தனர்.

வெகுஜன வாக்குரிமை சந்தர்ப்பவாதத்திற்குத்தக்க இடம் அளித்தது ஆழ்கடலில் தாழும் கப்பலை விட்டோடிப் போகும் எலிகள் போல் பலர் ஒருவர்பின் ஒருவராய் மாநாட்டை விட்டகன்றனர்.

இறக்கும்வரைக்கும்இலட்சிய வாழ்வைக் கைவிடாத மிகச் சிலரில் அமரர் நாகலிங்கம் ஒருவர்.

லங்கா சமசமாஜக் கட்சியின் முதுபெரும் உறுப்பினராக உழைத்த நாகலிங்கம் தேர்தலில் தோல்வி கண்டு ஒதுங்கி வாழ்ந்தவரல்லர். தமது கட்சியின் அரசியல் வேறுபாடுகளைக் கண்டு விரக்தியடைந்துதனிவாழ்வு வாழ்ந்தவரல்லர். தமது முற்போக்கு இலட்சியத்துக்கமையத் தமது பட்டினத்திற்கும் சமூகத்துக்கும் கடைசிவரை களைப்பின்றி உழைத்தவர்.

நாட்டுப்பற்றைவிடதமிழ் மக்களின் அரசியல் தாழ்வு நிலைகண்டு கவலைப்பட்டவர் நாகலிங்கம். மற்றைய தலைவர்கள் பலர் கட்சியின்பெயரால், பலத்தால் பாராளுமன்றம் கண்டனர். அதற்குத் தொடர்ந்து செல்ல வாய்ப்பும் பெற்றனர்.

தீவிரவாதமென்று கணிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கையால் அரசியல் முன்னணியில் நின்று பணிபுரிய வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், நாட்டின் மூதவை உறுப்பினராய், பட்டினசபைத் தலைவராய், ஏழைமக்களின் நண்பனாய், சமுதாய உள்ளூராட்சி மன்றச்சேவையில் தம்மை அர்ப்பணித்தவர்.

இடதுசாரித் தலைவர் ஒருவர் தமிழிலும் சைவத்திலும் அளப்பரிய பற்றுடையவரென்பதில் என்ன ஆச்சரியம்?

நிலையுற்ற பண்பாடும் கலாசாரமும் அரசியல் சித்தாந்தத்திலும் பார்க்க வலிமைமிக்க சாதனங்கள். உதாரணம்: கிழக்கு ஜெர்மனி; விகடமாகச் சொன்னால், பிறஷ்ய கம்மியுனிசம, ரஷ்ய கம்மியுனிசத்திலும் பார்க்க வலிமையானதோவென்று நினைக்குமளவிற்கு கிழக்கு ஜெர்மனி முன்னேறியுள்ளது.

## மெமோறியல் புதிய அதிபர்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி அதிபராக உதவிஅதிபராகக் கடமையாற்றிய திரு. வி. சுந்தரதாஸ் கல்வித்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (க)

பண்டதரிப்பு ப. நோ. கூ. சங்கம்

# நிதிநெருக்கடியால்காணிகள் வாகனங்கள்விற்க முடிவு!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நெருக்கடியை நீக்குவதற்காக சங்கத்திற்குச் சொந்தமான காணிகள் சிலவற்றையும், வாகனங்களில் சிலவற்றையும் விற்பனை செய்வதென்ற முக்கிய தீர்மானம் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்க உபதலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலையை மூடுவது என்ற இயக்குனர் சபையின் முன்னைய தீர்மானத்தை அங்கீகரிப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

புதிய இயக்குனர் சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

வ. சதாசிவம் (சித்திரைமேழி), அ. வேதநாயகம் (சில்லாலை), க. கந்தசாமி (சங்கானை கிழக்கு), சி சரவணமுத்து (மாதகல்), இ. ஆனந்தராசா (மாதகல்,) (க)

## மக்கள் கருத்து

## மின்சாரசபை கவனிக்குமா?

கடந்த காலங்களில் நடைபெற்றுவந்த சம்பவங்களை மனதிற்கொண்டு இவ்வேண்டுகோளை 'ஈழநாடு' பத்திரிகை மூலமாக விடுக்க முற்படுகின்றேன்.

கார்த்திகைத் தீபவிழா வருகின்ற 21-11-80-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே. கடந்த கால தீபவிழாக்கள் நடைபெற்றபோது யாழ். மின்சாரசபை வீதி, வீட்டு விளக்குகளை நிறுத்தி அழகு பார்ப்பது வழமை நடந்து முடிந்த பல தீபத்திருநாட்களில் இப்படியாக மின்சாரத் துண்டிப்பை மேற்கொண்ட சமயத்தில் சிலர் வேண்டத்தகாத முறையில் தீபங்களைத் தட்டிவிட்டு ஓடுவதையும், மணல் கொண்டுவந்து தீபங்களின் மேல் வாரி இறைத்து தீபங்களை அணைத்துவிடுவதையும் காணமுடிந்துள்ளது. தெரு விளக்குகளின் இன்மையால் தீபவிளக்கு வெளிச்சத்தில்இவ் வஞ்சகர்களை அடையாளம் காணமுடியாமற்போய்விடுகிறது. இச்சம்பவங்கள் கூடுதலாக நல்லூர் கோவில் வீதி, நக்கா வீதி, அம்மன் வீதி, நாவலர் வீதி ஆகிய இடங்களில் நடைபெறுவது வழமை. இதனால் பலர் தீக்காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். எனவே இதனை மின்சாரசபை மனதிற்கொண்டு தீபத்திருநாளன்று தாமும் மின்சார தீபமேற்றி மக்கள் துயர் துடைக்கும் என்றே நம்புவோம்.

இதே வேளை பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கவேண்டியுள்ளது. தீபம் ஏற்றிமுடிந்ததும் தீ மேற்றிய வாழைக் குற்றிகளை வீதியிற் போடுவதைத் தவிருங்கள். வீட்டினுள் போட்டுவைத்திருந்து பின் மாநகரசபை குப்பை வண்டி வரும்போது அதில் ஏற்றிவிடுங்கள் வீதியிற்போடுவதால் சிலர் அவற்றை நடுவீதிக்கு இழுத்து விட்டு போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படச்செய்து வந்தது நடந்துமுடிந்தவை. எனவே இதனைப் பொதுமக்கள் கவனத்திற்கொண்டு நடக்கும்படி வேண்டுகின்றேன்.

சு. ஞானலிங்கம்
கோவில் வீதி,
நல்லூர்.

## மரம்நாட்டு விழா

(பண்டத்தரிப்பு)

கட்டுடை சைவத்தமிழ் பாடசாலையில் மரம் நாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இம் மரம் நாட்டுவிழாவில் பிரதம அதிதியாக மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு வி. தர்மலிங்கம், தொழிலதிபர் திரு. க. கனகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

## மரபுக்கல்வியைப் பேணிய மாண்பினர்

மரபுமுறைக் கல்விக்கு வித்திட்ட ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பரீட்சைகளை நடத்தியும் தொடர்ந்து மாணவர்களை நெறிப்படுத்தியும் ஆற்றியசேவை மறுப்பதற்கில்லை. எனினும் இச்சேவை தடைபட்டுள்ளதை எண்ணினால் ஏனைய நிறுவனங்கள், சமூகங்கள் நிலைதளராது இருப்பதற்கில்லை. இச்சங்கம் தன்னிலையிற் தளர்ந்தமைக்குப பண்டிதர் துரைசிங்கம், பண்டிதர் சி. இராசையா என்பவர்கள் இயற்கையடைந்தமையே காரணமாகும்.

பண்டிதர் இராசையாவுக்கும் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க வகுப்புகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அன்னார் மறைந்து இன்று ஒரு திங்களுக்கு மேலாகின்றது. இவ்வெண்ணச்சுழற்சியின்மரபு முறைக் கல்வியையும் எமது நிலையையும் உணரச் செய்கின்றது

பண்டிதர் சி. இராசையா அரியாலையூரைச் சேர்ந்தவர். ஆசிரியராக, அதிபராக, இலக்கணப் பெரும்புலவராக இருந்து சேவையாற்றியவர், மட்டுவில் மகாலிங்கசிவத்துடன் மரபறிந்து நூற்கல்வியைப் பெற்றவர். தன்வாழ்நாளில் பெருமையைத் தேடியலையாத அடக்க சுபாவமுடையவராக இருந்தார். இவர் நினைத்திருந்தால் இவர்க்கிருந்த செல்வ நிலையைப் பயன்படுத்தி எவ்வளவோ பெருமையடைந்திருக்க முடியும். சூழலால் பெற்றஅறிவும் தேர்ந்துபெற்ற அறிவும் இயற்கையறிவும் பண்டித உலகினர்க்கே மட்டும் பயன்பட்டது. மாணவரே இவரது நூன்முடிபுணர்த்தும் திறமையை அறிவர் — மாணவர் தூண்டுதலால் நூன்முடிபையும் தன்முடிபையும் நூலுருவம் பெறச்செய்யும் முகமாக எழுதினார். அவை வெளிவர முன் மறைந்துவிட்டமை தமிழன்னையின் தவக்குறைவேயாகும். நூலுருவம் பெறச் செய்தல் அவர்தம் புதல்வர் கடமையாகும்.

பிறப்பால் ஊரும், வாழ்வால் மரபும் செழிக்க வாழ்ந்தவர். இவர் காத்த மரபும் ஏனையோர் காத்த மரபும் — குறிப்பாக இவரால் நடாத்தப்பெற்ற சங்க வகுப்புகளும் தொடரச்செய்வதே இவருக்கும் தமிழன்னைக்கும் நாம்ஆற்றும் கைம்மாறாகும்.

—வட்டூர்
என். கடம்பேஸ்வரன்

## அடிக்கல் நாட்டு விழா இன்று

(நெல்லியடி)

கரவை சாமியின் அர்ச்சடி ஞானவைரவர் ஆலய அடிக்கல் நாட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை நடைபெறும். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் அடிக்கல் நாட்டுவார்,

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இ. முத்துத்தம்பி, வட்டாரக் கல்வியதிகாரிகளான திரு. திரு. வி. சே. ஈசுரபாதம், திரு. பொன். கணேசன் ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றுவார்கள்.

விமான விபத்து:

## 22 சடலங்கள் மீட்கப்பட்டன

சியோல், நவ. 19

தென் கொரியாவின் சியோல் விமான நிலையத்தில் நேற்று தீப்பிடித்து விபத்துக்குள்ளான கொரியா ஏயர் லைன்ஸின் போயிங் விமானத்திலிருந்து சுமார் 22 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விமானத்தில் சுமார் 200 பிரயாணிகளும், 17 விமானச் சிப்பந்திகளும் பயணம்செய்திருந்தனர். இவ்விபத்தில் 12 பேர் காயமடைந்ததாகவும், எஞ்சியோர் மீட்கப்பட்டுவிட்டதாகவும் பின்னர் வந்த செய்திகள் கூறுகின்றன.

(முன்னர் வந்த செய்தி உள்ளே.) (ஷெ)

# அதி... மன்...

(மன்ன...)

மன்னார்ப்பகுதி...
டுச் சம்பவங்கள்...
பகுதி மக்கள் ...
அச்சத்துடனேயே...
டியுள்ளது. கோ...
விற்பனை செய்து...
டன் பொதுமக்...
கப்பட்டான்.
உள்ள படமாள...
உள்ள மதுப...
சதவில் உள்ள ...
ணெண்ணை ஊ...
மூட்டிய திருட...
யில் தோல்வி ...
அதேஇரவு பேச...
கர்த்தர்திருசொ...
இருந்த உண்டிய...
கப்பட்டுள்ளது.

## இருவர் மாட்டிக் ...

இதேவேளை ...

தபால் மு...

## உ... வருமா...

(பண்ட...)

''அரசாங்க...
திட்டப்பிரகா...
வர் நிலையங்க...
உபதபால் அ...
மானத்தை ப...
தாக அமை...
அவற்றை ...
டத்தை அர...
வேண்டும்''.

அகிலஇலங்...
உபதபால் அ...
தின் 18வது...
பொதுக்கூட்ட...
கண்ட நீர்மா...
பட்டுள்ளது.

கொழும்பி...
தந்தி தலைமை...
7வது மாடியி...
23ம் திகதி ...
இக்கூட்டத்தி...


# கா...



சாதனங்கள் சிறந்தவை. இயக்...

இலகுவான பா...

செய்வதற்கு நவீன சக்...

அடைக்கப்...

ஸி 200 கார்ட்ரிட்ஜ்கள் (190 கிராம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிகள்

வு!

ல் நாட்டு
இன்று
ல்லியடி)
மியின் ச்சடி
ஆலய அடிக்
விழா இன்று
காலை நடை
வட்டி உதவி
பர் திரு. மு.
லமையில் நடை
வபவத்தில் வட
பணிப்பாளர்
தன் அடிக்கல்

விரிவுரையா
முத்துத்தம்பி,
கல்வியதிகாரிக
திரு. வி. கே.
ரு. பொன்.
யோரும் இவ்
உரையாற்று

ந்து:
ங்கள்
ட்டன
பால், நவ. 19
வின் சியோல்
தில் நேற்று
த்துக்குள்
ஏயர் லைன்
விமானத்தில்
சடலங்கள்
ாக அறிவிக்
சுமார் 200
7 விமானச்
ணம்செய்தி
பத்தில் 12
த்ததாகவும்,
ப்பட்டுவிட்
னர் வந்த
றன.
செய்தி
(லெ)

# அதிகரித்துவரும் திருட்டுகளினால் மன்னார் மக்கள் அச்சம்!

(மன்னார்)

மன்னார்ப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் மன்னார்ப் பகுதி மக்கள் எப்பொழுதும் அச்சத்துடனேயே வாழவேண்டியுள்ளது. கோழிகளைத் திருடி விற்பனை செய்து வந்த ஒரு திருடன் பொதுமக்களினால் பிடிக்கப்பட்டான். பேசாலையில் உள்ள படமாளிகை ஒன்றில் உள்ள மதுபானச்சாலையின் கதவில் உள்ள பூட்டிற்கு மண்ணெண்ணை ஊற்றி நெருப்பு மூட்டிய திருடன் அம்முயற்சியில் தோல்வி கண்டுள்ளான். அதேஇரவு பேசாலையில் உள்ள கர்த்தர்திருசொரூபத்தின் முன் இருந்த உண்டியலும் உடைக்கப்பட்டுள்ளது.

## இருவர் மாட்டிக் கொண்டனர்

இதேவேளை பேசாலையில் உள்ள வீடொன்றில் இரவு நேரம் புகுந்த இரு திருடர்கள் அங்கு உறங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியைத் திருடினார்கள்.

தங்கச் சங்கிலியைக் கழுத்திலிருந்து திருடும்போது அப்பெண் விழித்துக் கொண்டார். திருடனின் கையில் கத்தியிருப்பதைக் கண்ட அப்பெண் நித்திரை செய்வதுபோல் பாசாங்கு செய்தார். திருடன் வெளியே சென்றதும் அருகில் உறங்கிக்கொண்டிருந்த தனது தந்தையை எழுப்பி நடந்ததைச் சொன்னார். உடனே பேசாலையில் பலத்த தேடுதல் நடத்தியும் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை. அதிகாலை 4 மணியளவில் பேசாலை டஸ் தரிப்பு நிலையத்துள் சென்று பார்த்தபோது இருவர் உறங்கிக்கொண்டிருந்தனர். சந்தேகத்தின் பேரில் அவர்களை விசாரணை செய்தபோது அவர்களிடம் திருடப்பட்ட தங்கச் சங்கிலியும் வேறு எங்கோ திருடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு ஜோடி ஜிப்சியும் கூரிய கத்திகளும் காணப்பட்டன. சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்,

## எதிர்பாராத தாக்குதல்

மன்னாரிலுள்ள வேரேரிடத்தில் நள்ளிரவிற்குப் பின் இயற்கைக் கடனைக் கழிக்க வெளியே வந்த பெண் எதிர்பாராத தாக்குதலுக்குள்ளானார். தாக்குதலையடுத்து இனம் தெரியாத நபர் ஒருவர் அங்கு பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டார்.

## வழிப்பறி

இதேபோல் தனது பாண் விற்பனையை முடித்துக் கொண்டு அதன் மூலம் கிடைத்த 200 ரூபாவை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றவர் இரண்டு பேரால் வழிமறித்துக் கத்தி முனையில் மிரட்டப்பட்டு அவரிடம் இருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இச்சம்பவம் உயிலங்குளத்தில் இடம்பெற்றது.

எருக்கலம்பிட்டியிலும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் எருக்கலம்பிட்டியில் இரண்டுதிருட்டுக்கள் இடம்பெற்றன.

## சிறுமியின் வளையல்கள் அபேஸ்!

வீடொன்றில் புகுந்த திருடர்கள் அங்கு தாயுடன் உறங்கிக் கொண்டிருந்த சிறுமியின் கையில் இருந்த வளையல்களைத் திருடிச் சென்றுள்ளனர். அத்துடன் சடிகாரம் ஒன்றையும் திருடிய திருடர்கள் அங்கு தமது கத்தி ஒன்றினை விட்டுச் சென்றுள்ளனர்.

இன்னுமொரு வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த கத்தி, குடங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

## கால் நடைகள் திருட்டு

காடுகளில் மேயப் போகும் ஆடு மாடுகளையும் திருடர்கள் சண்ணி வைத்து பிடித்துச் செல்கின்றனர், ஏராளமான ஆடு, மாடுகள் இதுவரை திருடப்பட்டுள்ளதாக பொலிசில் முறையிடப்பட்டுள்ளது. (அ)

தபால் முகவர் நிலையம்

# உபதபால் அதிபரின் வருமானத்தை பாதிக்குமாம்

(பண்டத்தரிப்பு)

"அரசாங்கத்தின் புதிய திட்டப்பிரகாரம் தபால் முகவர் நிலையங்கள் அமைப்பது, உபதபால் அதிபர்களின் வருமானத்தை மிகவும் பாதிப்பதாக அமையுமாதலால் அவற்றை திறக்கும் திட்டத்தை அரசாங்கம் நிறுத்த வேண்டும்".

அகிலஇலங்கை தமிழ்பேசும் உபதபால் அதிபர்கள் சங்கத்தின் 18வது வருடாந்தப் பொதுச்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தபால் தந்தி தலைமை அலுவலகத்தின் 7வது மாடியில் இம்மாதம் 23ம் திகதி நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக தலைமைத்தபால் அதிபதி திரு. ஏ. ஆர். எம். ஜயவர்த்தன கலந்துசொள்ளுவார்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ள இதர முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:

தேசியசேமிப்பு வழங்கப்பட்டுள்ள சம்பளஉயர்வை தபால் அதிபர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று மந்திரிசபை தீர்மானித்துள்ளது இச் சம்பள உயர்வை 60வீத சேமிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள உப தபால் அதிபர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

உபதபால் அதிபர்கள் கடன் சபையிலிருந்து கடன்பெறும் போது அவர்களுக்கு உப தபால் அதிபர்களே பிணையாளராக நிற்பதற்கு ஒழுங்குசெய்யப்படவேண்டும். (க)

# உப்புமா தொழிற்சாலை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா செலவில் உப்புமா அமைக்கும் தொழிற்சாலை ஒன்றை மாதகலில் அமைப்பதற்கு முடிவு செய்துள்ளது.

இத்தொழிற்சாலையில் அரைக்கப்படும் உப்புமா, கருவாடு பதனிடுவதற்கு பயன்படுத்தப் படவிருப்பதாகவும். ஜனவரி மாதத்தில் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்குமெனவும்சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. என். சண்முகசுந்தரம் தெரிவித்தார். (க)

# "கொடிகாமம் நவீன சந்தையை மாற்றியமைக்கவும்"

ஐ. தே. க. கிளை கோரிக்கை

(மட்டுவில்)

கொடிகாமம், கச்சாய் ஐக்கியதேசியக்கட்சி கிளை வாலிப முன்னணியினர் யாழ்மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

இந்த மகஜரில் கொடிகாமம் நவீனசந்தையை இடித்து புதியமுறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

மின்சாரவிஸ்தரிப்புசெய்துதர வேண்டும். கச்சாய்கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளரை உடனடியாக மாற்றி தகுந்த ஒரு விசேட ஆணையாளரை நியமிக்கவேண்டும்,

கச்சாய் கொடிகாமம்பகுதி ஐ. தே. க. கிளை அமைப்பாளர் திரு. கே. வி. பி. வேலாயுதபிள்ளை இக்கோரிக்கைகளை ஆமோதித்து கையெழுத்திட்டுள்ளார். (க)

# மின் அத்தியட்சகர் தாக்கப்பட்டார்

(நெல்லியடி)

அச்சுவேலி கிராமசபையின் மின்அத்தியட்சகர், இடைக்காடு உபமின்நிலையத்திற்குஅருகாமையில் இனம்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இத்தாக்குதல் சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிசார்புலன் விசாரணை செய்து வருகின்றனர். (க)

# டாக்டர்கள் தட்டுப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் டாக்டர்களின் தட்டுப்பாட்டால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். வெளிநோயாளர் பகுதியில் பெரும்பாலும் இரு டாக்டர்களே கடமை புரிகின்றனர்.

மருந்துகள் கூடப்போதியளவு கிடைக்காததால் தனியார் கடைகளில் பெறவேண்டியிள்ளதுடன் தனிப்பட்ட மருத்துவமனைகளை மக்கள் நாடவேண்டியுள்ளது. (க)


# காம்பிங் காஸ்.. சக்தி நிறைந்தது

## எங்கும் எப்பொழுதும் பாவிக்கக் கூடியது




உணவு சமைக்கவோ இருளைப்போக்கி வெளிச்சத்தை ஏற்றவோ,
தூக்கிச் செல்லக்கூடிய காம்பிங் காஸ்
சிறந்தவை. இயக்க இலகுவானவை, பாவனைக்கு எப்பொழுதும் தயாராக இருப்பவை.
இச் சாதனங்கள் புட்டேன் காஸில் இயங்குகின்றன.
இலகுவான பாவனைக்கென கைக்கடக்கமான நீல அடைப்புகளிலும் குவளைகளிலும்
விற்பனைக்குள்ளன. தேவை ஏற்படும் பொழுதெல்லாம் பாவனை
வதற்கு நவீன சக்தியைக் கொண்ட மீள் நிரப்புக் குவளைகள் எப்பொழுதும் கிடைக்கும்,
இறக்குமதி செய்யப்பட்ட மீள் நிரப்புக் குவளைகள்
மீண்டும் நிரப்ப முடியாமல் பாதுகாப்பாக
அடைக்கப்பட்டுள்ளன. வேண்டிய தொகை மீள் நிரப்பிகள் விற்பனைக்குள்ளன.
காம்பிங் காஸ் ஸ்டோவ் ரூ. 180/-ம் மேலும், லாம்புகள் ரூ. 240/-ம் மேலும்
ரிட்ஜகள் (190 கிராம்) ஒவ்வொன்று ரூ. 20/- பிரத்தியேக லாம்பு திரிகளும் சிமினிகளும் கிடைக்கும்



விசாரணைகள்:
விற்பனை முகாமையாளர்,
தொலைபேசி: 21464

கொழும்பு காஸ் அன்ட் வாட்டர் கொம்பனி
லிமிட்டெட்டின் மரபு உரிமை பெற்ற
இலங்கை அரசாங்கம்,
காஸ் வேர்க்ஸ் ஸ்ட்றீட்,
கொழும்பு 12.
தொலைபேசி: 32311, 32312, 37042, 37043


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் மக்கள் ஒத்துழைத்தால் நாடு சுபீட்சமடையும்"

## - யாழ். மாவட்ட அமைச்சர்

(புலோலி)

"இந்நாட்டில் நிரந்தர ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் வளர்த்து இன, மத பேதமற்ற ஆட்சியை நடாத்திவருவது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்தான். இந்த அரசாங்கத்திற்குத் தமிழ்மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதன்மூலம் நாம் சுபீட்சம் பெறமுடியும்".

இவ்வாறு வடமராட்சி கிழக்குப் பகுதியான உடுத்துறையில் ஐக்கிய தேசியக்கட்சிக் கிளைக்காரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோன் குறிப்பிட்டார். திரு. எஸ். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழா வைபவத்தில் மாவட்ட அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்,

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்நாட்டில் வாழும் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க முன்வரவில்லை அவர்கள் இந்நாட்டைப் பிரிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனால் இந்நடவடிக்கை ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை. இக்கிராமத்தில் கூட மீனவர் மாதிரிக்கிராம அமைப்பின் கீழ் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுபோல சகல கிராமங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன" என்றார்.

பருத்தித்துறை நகரசபை ஐ. தே. க. உறுப்பினர் திரு. சி. வ. சந்திரசேகரம் பேசுகையில்,

"எமது பகுதிகள் அபிவிருத்தியடையும் போதுதான் நாம் சுபீட்சம் பெறமுடியும். ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையிலான தார்மீக அரசாங்கம் தமிழ்மக்களுக்குப் பல உரிமைகளை வழங்கி வருகின்றது. கடந்த அரசாங்க காலத்தில் தமிழினம் பலவழிகளிலும் பின் தள்ளப்பட்டு வந்தது. இந்த அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறப்பானதென்பதை, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூட மாவட்ட அபிவிருத்திச்சபையை ஏற்றுக்கொண்டதன் மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நாம் வகுப்பு வாதங்களைப் பேசிக் கொண்டிருப்பதனால் எமது முன்னேற்றமும் அபிவிருத்தியும் பின்தள்ளப்படுமே தவிர வேறு எதுவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. எனவே தேசிய ஐக்கியத்தையும், சகோதரத்துவத்தையும் நிலைநிறுத்த எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் சுபீட்சமடையலாம்" என்றார்.

சிறுபான்மைத்தமிழர் விடுதலை முன்னணி செயலாளரும் ஐ. தே. க. பிரமுகரும், வட இ. போ. ச. இயக்குனருமான திரு. எம். எஸ். அலெக்ஸண்டர் பேசுகையில் "தேசிய இனங்களின் ஐக்கியத்தின் மூலமே எமது நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். எனவே தேசிய இன ஐக்கியத்தை வளர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு எமது அரசாங்கத்திற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டியது முக்கியமாகும்" என்றார்.

ஆசிரியர் திரு. மோசஸ், திரு. அலோசியஸ் ஆகியோர் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். ( )

# உபதபால் அதிபரை நியமிக்குக

(சித்தன்கேணி)

சித்தன்கேணி உபதபாற் கந்தோருக்கு நிரந்தர உபதபால் அதிபரை நியமிக்குமாறு சித்தன்கேணி கிராமமுன்னேற்றச் சங்கம் கடிதமூலம் தபால்மா அதிபரையும் தபால் தந்தி தொடர்புகள் அமைச்சரையும் கேட்டிருக்கின்றது.

இக்கடிதத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நிரந்தர தபால் அதிபர்இல்லாமல் இவ்வுபதபால் கந்தோர் இயங்குவதாகவும் இதனால் பொதுமக்கள் பாதிப்படைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி வட்டுக்கோட்டைத் தொகுதிபாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (க)

# "சகோதரர்களாகப் பிறந்த எமக்குள் பிரிவினையா?"

(மட்டுவில்)

"மறுபிறப்பில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்து, பௌத்த மக்கள். கடந்த பிறப்பில் சிங்களவர் தமிழராகப் பிறந்திருக்கலாம், தமிழர் சிங்களவராகப் பிறந்திருக்கலாம். இந்த நிலையில், ஈழத்தாயின் பிள்ளைகளாகிய நமக்குள் பரஸ்பர அன்பு, ஒற்றுமை சகோதரத்துவத்தைத் தவிர, பிரிவினை தேவையா?"

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், எழுதுமட்டுவாளில் ஐந்து ஐ. தே. கட்சிக்கிளைகள் சேர்ந்து நடாத்திய வரவேற்பு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

சாவகச்சேரி நகரசபை ஐ. தே. க. உறுப்பினர் திரு! வி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட அமைச்சர் நாகர் கோவில், எழுதுமட்டுவாள் வீதியையும் பார்வையிட்டார். இந்த வீதி சீராக்கப்பட்டால் எழுதுமட்டுவாளிலிருந்து நாகர்கோவிலுக்கு 8 மைல் தூரத்தில் செல்ல முடியும். இப்பொழுது 23 மைல் தூரம் சுற்றிவர வேண்டியநிலையிலுள்ளது என்றும், அமைச்சருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

எழுதுமட்டுவாள் பகுதிக்கு மின்விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லை, என்றும் முறையிடப்பட்டது.

மாவட்ட அமைச்சர் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது:

"அடுத்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் சாவகச்சேரித் தொகுதிக்கு சுமார் இரண்டரைக்கோடிரூபா ஒதுக்கப்படவுள்ளது. மாவட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட இந்த நிதியில் மின் விநியோகம்நடத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்".

சாவகச்சேரி ஐ. தே. கட்சி பிரமுகர் திரு. எஸ். எஸ். முத்தையா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (ஈ)

# மனம்போன போக்கில் சென்றவர் கடலுக்குப்பலி

(பண்டத்தரிப்பு)

மனம் போன போக்கில் சென்ற மன நோயாளி ஒருவர் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவம் மாதகல் சம்பல் துறைப் பகுதியில் நடைபெற்றது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஐயாத்துரை சுப்பிரமணியம் என்னும் 48 வயது நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரண விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் முன்னிலையில் நடைபெற்றபோது மாதகல் மேற்கு உபதபால் அதிப திரு. இ. கிருபானந்தன் காலம் சென்றவரின் சகோதரி அன்னம்மா பரமநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவர் புத்தி சுவாதீன மற்ற மன நோயாளி என்றும் வீட்டில் சொல்லிக் கொள்ளாது திடீரென அடிக்கடி சென்று விடுவார் என்றும் 2, 3 நாட்களின் பின்பு மீண்டும் வீட்டிற்கு திரும்பி வருவார் என்றும் சம்பவதினத்தன்று காலையில் இவ்வாறு வீட்டிலிருந்து சென்றவர் திரும்பி வரவில்லை என்றும் மாதகல் கடற்கரையில் இவரது சடலம் மிதந்து வரக்காணப்பட்டது என்றும் சாட்சியங்கள் மூலம் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மன நோய் காரணமாக நீரில் மூழ்கி தற்கொலை செய்துள்ளார் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (க)

# "மருத்துவ நூல்கள் வைத்திய மாணவருக்கும் பயன்படவேண்டும்"

## யாழ். றோட்டரி சங்கத்தலைவர் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி நூலகத்திற்கு வழங்கப்பட்ட வைத்திய நூல்கள், யாழ்ப்பாணத்திலுள்ள வைத்திய கல்லூரி மாணவர்களுக்கும், மேல்படிப்புக்காக முயற்சிக்கும் இளம் டாக்டர்களுக்கும்பயன்படுத்துவதற்காகவே குறிப்பாகப் பெறப்பட்டது. அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் யாழ். வைத்திய சங்கம் இந்நூல்களை பாவிக்கும் என நம்புகிறேன்.

யாழ். பெரியாஸ்பத்திரி நூலகத்திற்கு யாழ். றோட்டரி கழகத்தினர் சுமார் 1500 நூல்களை அன்பளிப்புச் செய்த வைபவத்தில் பேசிய யாழ். றோட்டரி கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். வைத்திய சங்கத்தலைவர் டாக்டர் விஜயராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமெரிக்காவிலுள்ள சிடார் றப்பிட்ஸ் றோட்டரி கழகத்தினரால் யாழ். றோட்டரிகழகத்திற்கு வழங்கப்பட்ட சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் யாழ்.வைத்திய சங்கத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

டாக்டர் விஜயராசா பேசுகையில் கூறியதாவது:

யாழ். றோட்டரி கழகம் இந்த நன்கொடையை மட்டுமல்ல, மேலும் பல சேவைகளை யாழ்ப்பாணத்திற்குச் செய்துள்ளது யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்னால் பார்வையாளர் தங்கும் இடத்தையும் கட்டி நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

யாழ். றோட்டரி சங்கத் தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் நூல்களை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நூல்நிலைய நூலகரிடம் கையளித்தார். இவற்றில் 300 வைத்திய நூல்களும், 66 வகையான சுமார் 1200 சஞ்சிகைகளும் அடங்கியிருந்தன.

இக்கூட்டத்தில் யாழ்.வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அமரசிங்கம், யாழ். றோட்டரி கழகச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ். சேனாதிராசா, மற்றும் றோட்டரி கழக உறுப்பினர்கள், டாக்டர்கள் கலந்து கொண்டனர், (க)

# துப்பாக்கிச் சூட்டுக்குப்பலி

(வவுனியா)

மாமடுவைச் சேர்ந்த முண்டான் குளத்துவாசியான ஹேரத் முதியான் சலாகே டாவி அப்புகாமி என்பவர் அவரது கமத்துக்கருகில் குளக் கட்டோரம் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

கமத்திற்குக் காவலுக்காகச் சென்ற டாவி அப்புகாமி மறுநாள் மத்தியானம் வரை வீடு திரும்பாததைக்கண்ட அவரது மனைவி அவரதுபிள்ளைகளுடன் அவரைத் தேடிக்கமத்திற்குச் சென்றார். அவருடன் சென்ற அப்புகாமியின் சகோதரர்களாகிய ரஞ்சித், சாத் ஆகிய இருவரும் குளத்தடியில் அப்புகாமி இறந்து கிடந்ததைக்கண்டு வவுனியா பொலிசாருக்குத் தெரிவித்தார்கள்

பிரேத பரிசோதனையின் பொழுது துப்பாக்கிச்சூட்டினாலேயே மரணம் ஏற்பட்டுள்ளது என்பது தெரியவந்தது இக்கொலைதொடர்பான விசாரணைகளை வவுனியா தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கே. ஆரியதிலகா நடாத்திவருகின்றார். (அ)

# இளம் பெண் றிமாண்டில்

(மன்னார்)

மன்னார் கடைவீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளம் பெண் ஒருவரை மன்னார் கடைவீதிப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் திரு. ஏ. ஏ. ராஜா, திரு. வி. பிரான்சிஸ் ஆகியோர் பொலிசில் ஒப்படைத்தனர்.

இப்பெண்ணைப் பொலிஸ்நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இப்பெண்ணைப்பற்றிய விபரங்கள் தெரியும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (க)

# புதிய கமிட் தெரிவு

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் உபஅதிபர் திரு. மு. திருநீலகண்ட சிவம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. கே. கே. நடராசா. உபதலைவர்கள்:- திரு என் தியாகராசா, திரு. வே. சுப்பையா. செயலாளர்: திரு. நா. க. தங்கரத்தினம் உபசெயலாளர்:- திரு. அ. மார்க்கண்டு பொருளாளர்:- திரு என். எஸ். கந்தசாமி. (க)

# இப்போதுதான் நிறைவேறியது

(அரியாலை)

யாழ். மாநகராட்சி மன்றத்தில் கலைமகள் வட்டாரத்திலுள்ள நொத்தாரிஸ் வீதிக்கு மின்கம்பி இணைக்கப்பட்டுமின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநகர முதல்வராக திரு. அல்பிரட் துரையப்பாகடமையாற்றிய காலத்தில் இவ்வீதிக்கு மின்சாரம் வழங்கும்வேலை ஆரம்பிக்கப்பட்டது, ஆனால் அதுமுற்றுப் பெறவில்லை.

இவ்வீதிக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திக்கொடுக்கும்படி இப்பகுதியிலுள்ள ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையமும் காந்தி சனசமூக நிலையமும் நீண்டகாலமாக முயன்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# புதிய பஸ் சேவை

(திருமலை)

திருகோணமலைத் தொகுதியில் உள்ள தென்னைமரவாடியை முன்னேற்ற வேண்டும் என்ற எனது எண்ணம் படிப்படியாக நிறைவேறி வருகின்றது இப்புதிய பஸ்சேவையினால் இக்கிராம மக்கள் தங்கள் அவசியத்தேவைகளை நிறைவேற்றமுடியும்.

திருகோணமலை நகர தென்னைமரவாடி பஸ் சேவையை ஆரம்பித்துவைத்த வைபவத்தில் திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் பேசுகையில் குறிப்பிட்[illegible] திரு. பி. தாசாவும் கலந்து கொண்டார். (க)

# விசேட ஆணையாளர் நியமனம்

(பண்டத்தரிப்பு)

வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் இம்மாதம்தொடக்கம் உடுவில் கிராம சபை விசேட ஆணையாளராக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் சிபார்சின் பேரில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. செபநாயகம் மானிப்பாய் கிராமசபை விசேட ஆணையாளராகவும் பதவி வகித்து வருகின்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பாடசாலைகள் வி. சங்கம்

நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி

# மானிப்பாய்இந்து 'சி' பகுதி சாம்பியனாகத் தெரிவு

(யாழ்விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2-ம் பிரிவில் "சி" பகுதி சாம்பியனாக மானிப்பாய் இந்துக்கல்லூரி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி இச்சுற்றுப்போட்டியில் தமது பிரிவில் கலந்துகொண்ட எல்லாப் போட்டிகளிலும் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்துக் கல்லூரியுடன் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 4—2 கோல்களாலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில்3—1 கோல்களாலும், வயாவிழான் ம. மகா வித்தியாலயத்துடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 1—0 கோல்களாலும் வெற்றியீட்டியது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி இப்பிரிவில் சாம்பியனாக வந்ததின் மூலம் கால்இறுதிப் போட்டிக்குக் கலந்து கொள்ள தகுதிபெற்றுள்ளது. (ஈ)

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வெற்றி

(பலாலி)

பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரியும், ஊர்காவற்றுறை சென். அந்தனிஸ் கல்லூரியும் கலந்துகொண்ட சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி2—1கோல்களால் வெற்றியீட்டியுள்ளது இலங்கைகடற்படைக் கோஷ்டியுடனான மற்றுமொரு போட்டியிலும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி 4-1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியுடன் போட்டியிட்ட மற்றுமொரு போட்டியிலும் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி 3—2 கோல்களால் வெற்றியீட்டியது. பலாலி ஆசிரியபயிற்சிக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு முறையே திரு. சி. எஸ். அருட்பிரகாசம், திரு. கே. யதுகுலசிங்கம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (வெ)

## கால் இறுதிப் போட்டி நாளை ஆரம்பம்

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 1-ம் பிரிவு, 2-ம் பிரிவு, 3-ம் பிரிவு கால் இறுதிப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில்ஆரம்பமாகி தொடர்ந்து 23-ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில்யாழ். இந்துக்கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வயாவிழான் மத்திய மகாவித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, அருணோதயாக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ஆகியன மோதவுள்ளன.

இப்போட்டிகளுக்கான சகல ஒழுங்குகளையும், யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் எஸ். ராசாரியும், பொதுச்செயலாளர் காப்டன் ந. சோமசுந்தரமும், உதைபந்தாட்ட காரியதரிசி கே. எம். எஸ். கமீட்டு செய்துவருகின்றனர். (ஈ)

## மின்னொளி கரபந்தாட்ட போட்டி முடிவுகள்

(மாவிட்டபுரம்)

தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னொளி கரபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் 'ஏ' பிரிவில் 20 கழகங்களும் 'பி' பிரிவில் 24 கழகங்களும் 4 பேர் போட்டியில 54 கழகங்களும் பங்குபற்றின.

'ஏ' பிரிவில் உடுப்பிட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகமும் மோதி உடுப்பிட்டி உதயசூரியன் சாம்பியனானது.

'பி' பிரிவில் தம்பசிட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும், தையிட்டி பராசக்திவிளையாட்டுக்கழகமும் மோதி தம்பசிட்டி காந்திஜி சாம்பியனானது.

4 பேர் போட்டியில் உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக்கழகமும் நீர்வேலிஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதி உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

இவ்விறுதிச் சாம்பியன் போட்டிகள் காங்கேசன்துறை மகாவித்தியாலய மைதானத்தில் நடந்தன.

போட்டிகளையடுத்து நடந்த பரிசளிப்புவிழாவில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசும்போது, விளையாட்டுக்கழகங்கள் மழைக்கு முளைக்கும் காளான்களாக இராது நிரந்தரமாக இயங்கி சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவேண்டும்" என்றார்.

33 வருடங்களாக இயங்கும் தையிட்டு ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் சேவையையும் அவர் பாராட்டினர்.

திரு. கே. வி. இராசரத்தினம் தலைமையில் நடந்த இப்பரிசளிப்புவைபவத்தில்திருமதி கலைமகள் திருநாவுக்கரசு பரிசில்களை வழங்கினர். (க)

## பாலர் விளையாட்டுப்போட்டி

(உடுப்பிட்டி)

கரவெட்டி புனித லூர்து மாதா கன்னியர் மடப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் 1ம் திகதி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில்நடை பெறவுள்ளது.

ஆறு வயதுக்கு உட்பட்ட பாலர்களுக்கிடையேநடாத்தப்படும் இவ் விளையாட்டுப் போட்டிக்கான ஒழுங்குகளை கன்னியர் மடத் தாயார் சங். சகோதரி லியோனு செய்து வருகின்றார். (அ)

## கசிப்புவேட்டையில் வெற்றிகண்ட பொலிஸார்

(வவனியா)

வவனியாவைச் சேர்ந்த அலைகல்லு கிராமப்பகுதியில் பல நாட்களாகப் பிடிபடாமல் பொலிசாரின் கண்களில் மண்ணைத் தூவி வந்த கசிப்புக்காரர்களை, திடீர் வேட்டையாடிய பொலிசார் மடக்கிப்பிடித்தனர்.

இரகசியமாகக் கிடைத்த தகவலின் பேரில் சப் இன்ஸ்பெக்டர்கள் ரஞ்சித் அமரதேவ, குணசிங்க ஆகியோர் தலைமையில் சென்ற இரண்டு பொலிஸ் கோஷ்டிகளும் ஐந்து கசிப்புக்காரர்களைக் கைதுசெய்துள்ளன.

அலைகல்லில் இருந்து வவனியா வந்து கொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்றைச் சோதனையிட்டதில் 12 டிராம் கசிப்பை விற்பனைக்காக எடுத்துச் சென்ற எஸ். என். ரணசிங்க, பி அபேசிங்க என்ற இரண்டு சந்தேகநபர்களையும் ஒரு பொலிஸ் கோஷ்டி கைது

(8-ம் பக்கம் பார்க்க)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
Bugsy Malone

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

வெற்றி முழக்கமிடும் 7-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கா-ஜெய்சித்திரா அசோகன்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

இன்று மட்டும்
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

SANTHI Jaffna - 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
★ SIDNEY POITIER
★ MICHAEL CAINE in
"The Wilby Conspiracy"
Action - Suspense - Thriller - Color
Await! "THE DIRTY DOZEN"

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
அவள் ஒரு ஜீவநதி

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sally Field in
SMOKEY AND THE BANDIT
action-comedy-color

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ★ சீமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப்பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா
விதுபாலா ★ ரீனா ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆல்பரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறு விறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## "கிராம ரீதியில் செயல்படவேண்டும்"

(மாவிட்டபுரம்)

"மோசடி வர்த்தகர்களிடமிருந்து பாவனையாளர்களைக் காப்பாற்ற பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் துரிதமாகச் செயல்படவேண்டும். கிராம ரீதியில் இச்சங்கங்கள் செயல்பட்டு ஒவ்வொரு கிராம மக்களையும் காப்பாற்றவேண்டும்.

இவ்வாறு பளை வீமன்காமம் கிராமசேவகர் பிரிவின் ஒரு பகுதிக்கான பாவனையாளர் பாதுகாப்புச்சங்கமொன்றை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய யாழ். விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரி திரு. எஸ். நவரத்தினம் கூறினர். (க)

# முன்னைய ஆட்சிக்காலத்தில் நாட்டின் ஜனநாயகத்தை எஸ். ஜே. வி. தான் பாதுகாத்தார்

## பாராளுமன்றத்தில் அமைச்சர் காமினி

(கொழும்பு)

**அமரர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் நடவடிக்கையினாலேயே இந்த நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது என்று காணி. காணி அபிவிருத்தி மகாவலிஅபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் கூறினர்:**

வரவுசெலவுத்திட்ட உரையின்மீது நடைபெற்றுவரும் விவாதத்தில் கலந்துகொண்டு அரசு தரப்பில் பதிலளித்துப் பேசிய திரு. காமினி திஸநாயக்க முந்திய அரசு பதவியிலிருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை விபரித்தார்.

முந்திய அரசு தேர்தல் முறையை ரத்துச் செய்வதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுத்தது. அதற்காக திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் ஆதரவைப்பெற்றுக்கொள்ள அவர்கள் அடிக்கடி அவருக்குத்தூது அனுப்பினர்கள். ஆனல் திரு. செல்வநாயகம் அதுகுறித்து அக்கறை காட்டாமல் இருந்துவிட்டார். அவர் அப்படிச்செய்ததினலேயே இன்று ஜனநாயகம் இந்த நாட்டில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று திரு. திஸநாயக்க கூறினர்.

### 83-க்குப்பிறகுதான் மகாவலி வரும்

மகாவலிகங்கையை வடக்கே கொண்டுவருவது பற்றி நான் யாழ்ப்பாணத்தில் பேசியிருக்கிறேன். இப்போதுள்ள நிலைமையில் 1983-ம் ஆண்டுதான் இந்த 2 கோடி டாலர் செலவு பிடிக்கும் திட்டம் பற்றி அறிக்கையைச் நிபுணர்கள் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அறிக்கையைப் பொறுத்துத்தான் மகாவலிகங்கை வடக்குக்குத் திருப்பப்படுவது பற்றி தீர்மானிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னர்.

### வடக்கில் நீர்ப்பாசனத் திட்டங்கள்

யாழ்ப்பாணத்தில் 9 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களும். 40 சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களும் செயற்படுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். மன்னரில் 2 பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களும் 60சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களும், முல்லைத்தீவில் 4 பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களும் 60சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும், வவனியாவில் 2 பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களும், 100 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும், திருகோணமலையில் 5 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், 95 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் செயல்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர்கூறினர். அமெரிக்க உதவியுடன் 81ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இவை செயல்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனல் அமெரிக்காவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளின் காரணமாக அடுத்த வருடம் ஜூன் மாதம் அளவிலேயே இத்திட்டங்களை ஆரம்பிக்கக்கூடியதாய் இருக்கும் என்று அமைச்சர் சொன்னர்.

ஸ்ரீலங்கா சுதந்திரச் கட்சித் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்க பேசுகையில் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் வடக்கே சென்றபோது மகாவலி வடக்கே திசைதிருப்பப்படும் என்று பேசிவிட்டு வந்தார். இங்கு வந்ததும் ரந்தெனிகலதிட்டத்தை ரத்து செய்தார். இதிலிருந்து ஏனைய திட்டங்களும் தாமதமாகும் என்று தெரியவருகின்றது. வெளிநாடுகளில் பிச்சை எடுத்துவந்த பணத்தையெல்லாம் திட்டம் எதுவுமின்றி மகாவலித்திட்டத்தில் கொட்டி வீணடிக்கிறர்கள் என்றர். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நான்தான் தலைவர் என்று அடிக்கடி கூறி மக்களை பயமுறுத்துகிறர் என்றும் அவர் கூறினர். (ம)

## பிரதிஷ்ட விக்கிரக பவனி இன்று

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு யாழ். தட்டாதெருச் சந்தி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆசிரிய கலாசாலைக்கு பவனியாக எடுத்துச் செல்லப்படும்.

இவ்விக்கிரக பவனி தட்டாதெருச்சந்திவிநாயகர்ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கந்தர்மடம் சந்திக்கு அரசடிவீதிவழியாகச்சென்று பலாலி வீதிவழியாக வசாவிளான் சந்தியை அடைந்து கலாசாலைக்குச் செல்லும்.

கலாசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திவிநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. (இ)

## பிரதமருக்கு நல்லூர் சிவா பாராட்டு

(கொழும்பு)

தமிழர் விடுலைக் கூட்டணி எம். பிக்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்தான் என பிரதமர் திரு. ஆர். பிரேமதாச மட்டுமே மதிக்கிறர். ஏனைய அமைச்சர்கள் எம்மை அப்படி மதிப்பதில்லை.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர்.

ஜனதிபதிதிரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கீழ் உள்ள திணைக்களத்தில் கூட விசேடசேவைகள் உதவலர்களுக்கான ஆறு பதவி வெற்றிடங்களில் மூன்று உங்களுக்குமிகுதி மூன்றும் ஐ. தே. க. அமைப்பாளர்களுக்கு என்று ஒரு அதிகாரி எம்மிடம் கூறினர் என்றும் திரு. சிவசிதம்பரம் கூறினர்.

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு, மன்னர் எம். திரு. பி. எஸ். சூசைதாதாசன் ஆகியோரது 'பட்ஜட்' விவாதங்களையும் பிரதமர் பாராட்டிப் பேசினர். (ம-இ)

## சுன்னகத்தில்--

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரவேற்பு ஒன்றை அளிக்கின்றர்கள். நாளை வெள்ளிக்கிழமை மாலை சுன்னகம் சந்தை மைதானத்தில் இந்த வரவேற்பு வைபவம் நடைபெறுகிறது. (இ)

## தனிநாடு--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தன் மூலமே அவற்றைத் தீர்க்க முடியும்.

ஒற்றுமையாகச் செயல்படும் பட்சத்தில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நாம் முன்னேறலாம். அந்த முன்னேற்றப்பாதையின் அடிக்கற்களே மாவட்ட அபிவிருத்திச்சபைகளாகும். எமது நீண்ட பயணத்தை நாம் ஒவ்வொரு அடிகளாகவே தாண்டிச்செல்லமுடியும்.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவைக்கூட இனப்பிரச்னையாகி சுதந்திரக் கட்சியினர் எதிர்த்ததையும் கூட்டணியினர் மறந்துவிட்டனரா?

எம்மைவிட சிறந்த நீதியை சுதந்திரக் கட்சியினரிடமிருந்து உங்களால் பெற்றுவிடமுடியுமா? அநீதிகளை ஒழிக்கவே நாமும் பாடுபட்டுவருகிறேம்.

அநீதிகள், பிரச்னைகள் இல்லாமல் இல்லை. பிரச்னைகளிலிருந்து தப்பிஓட நாம் எத்தனிக்கவில்லை. கஷ்டங்களை நாம் எதிர்நோக்கியுள்ள போதிலும் 83ம்ஆண்டுக்குமுன்னர் சுபீட்சமான வாழ்க்கையை மக்களுக்குத்தருவோம்.

தமிழ் மக்களும் இந்தநாட்டு மக்களே - அவர்கள் எமது சகோதரர்கள்: அவர்களை நாம் எச்காரணம் கொண்டும் புறக்கணிக்கமாட்டோம். (ம-இ)

## நெடுங்கேணி கொள்ளை:

# இருவர் கைது!

## ஒருவர்திருட்டுக்குத் துப்புக் கொடுத்தவர்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையத்திலிருந்து வருவதாகக்கூறி நெடுங்கேணி மருதோடையில் உள்ள வீடு ஒன்றிற்குள் நள்ளிரவில் புகுந்து 33 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும், துப்பாக்கி ஒன்றையும் கொள்ளையடித்துச்சென்றது சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில்இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கொள்ளை சம்பந்தமாகப் புலன்விசாரணையில் ஈடுபட்ட முல்லைத்தீவுப் பொலிசார் சந்தேகத்தின்மீது மருதோடையைச் சேர்ந்த ஒருவரையும் இன்னொருவரையும் கைதுசெய்தனர்.

மருதோடையைச் சேர்ந்தவரைப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியபோது பொலிசாருக்கு அவரளித்த வாக்குமூலத்தில், 'யாழ். சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதிகள் இருவர் மருதோடைக்கு வந்து என்னைச் சந்தித்து இவ்வூரில் யாரிடம் பணமிருக்கிறது என் என்னைப் பயமுறுத்திக் கேட்டனர். நான் பயத்தில் மருதோடையைச் சேர்ந்த சின்னத்தம்பி தவசிங்கம் என்பவரிடம் பணம் இருப்பதாகவும், அவர் அண்மையில் வாகனம் ஒன்றை விற்றுப் பணம் வைத்திருப்பதாகவும் கூறினேன். இதுதவிர கொள்ளைக்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை" என்றர்.

இக்கொள்ளை சம்பந்தமாக மேலும் ஐவர் தேடப்பட்டுவருகின்றனர் என வடபிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. த. மகேந்திரன் தெரிவித்தார். (கொ)

கன்பொல்லை மாதிரிக்கிராமம்

## பிரதமர் ஜனவரியில் திறந்துவைப்பார்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள மாதிரிக் கிராமமான சரவெட்டி - கன்பொல்லை மாதிரிக் கிராமம் எதிர்வரும் ஜனவரி மாதம் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினல் திறந்துவைக்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தெரிவித்தார்.

கன்பொல்லை மாதிரிக் கிராமத் திட்டவேலைகளை கடந்த ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அப்போதைய யாழ். மாவட்ட அமைச்சராகவிருந்த ஜனப் ஏ. ஆர். மன்சூர், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர் அடிக்கல்லை நாட்டி ஆரம்பித்து வைத்தார்கள்.

85 வீடுகளும். ஏழு கடைகளும், நூல்நிலையம் ஒன்றும், நீச்சல் தடாகம் ஒன்றும் இம் மாதிரிக் கிராமத்தில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டுள்ளன.

கன்பொல்லை மாதிரிக் கிராமம் திறந்து வைக்கப்படும்போது 'இராஜ கிராமம்' என்ற புதிய பெயர் இம் மாதிரிக் கிராமத்திற்குச் சூட்டப்படும். (க)

## கசிப்பு..,

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்தது.

கிராமத்தின் உள்ளே சந்தேகத்திற்குள்ளான இடத்தைச் சுற்றிவளைத்த இன்னுமொரு பொலிஸ் கோஷ்டி மூன்று சந்தேகநபர்களைக் கைதுசெய்தது. டி எஸ் டி.குலரட்ண, புஞ்சிபண்டா, ராஜசிங்க புஞ்சிபண்டா ஆகிய மூவரையும் கசிப்புக்காய்ச்சும் பொழுதும், விற்பனை செய்கையிலும் கையும்மெய்யுமாக வளைத்துப் பிடித்தனர்.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு-நாகலிங்கம்

கட்டுடையைச் சேர்ந்த கார்த்திகேசு நாகலிங்கம் காலமானர். இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் கணவரும் திருமதி பரமசாமி, சிவரத்தினம் (இளைப்பாறிய சுங்க சேகரிப்பாளர்), நாகராசா (மத்திய தந்திநிலையம், கொழும்பு), திருமதி கந்தையா, கந்தசாமி (உப சுங்க சேகரிப்பாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையுமாவார். அன்னரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (20-11-80) பகல் 12 மணியளவில் திருநெல்வேலி தெற்கு அம்பலவாணர் பாதையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். 74 1

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் [illegible] 68-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 20 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QD 8948/78 The Eelanaadu P. B. No 49. Grams Eelanaadu. Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org